# வித்யாமலர்

## நவம்பர், 2019



Published by

# Vidyarambam Trust

**Old No: 85/New No: 94, Park View Apartment, G.N.Chetty Road, T.Nagar, Chennai – 600 017**

## திருநெல்வேலி மாவட்டம்





17.06.2019, 18.06.2019 , 19.06.2019 ஆகிய நாட்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் விஜய அச்சம்பாடு கிளை அலுவலகத்தில் வைத்து 1st Term Training திருமதி முத்துச்செல்வி, திருமதி டாரணி சாந்தி, திருமதி சிவசாந்தகுமாரி அவர்களால் கொடுக்கப்பட்டது. 22 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். மற்றும் Assessors, ELE teachers, Computer Staff அனைவரும் கலந்து கொண்டனர்.

19.06.2019, 20.06.2019 , 21.06.2019 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் லீபுரத்தில் வைத்து திருமதி முத்துச்செல்வி திருமதி சாந்தகுமாரி, செல்வி மலர் அவர்களால் 1st Term Training கொடுக்கப்பட்டது. இதில் 15 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர்.





01.07.2019 அன்று திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வித்யாரம்ப மையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. பின் குழந்தைகளிடம். Pre test எடுக்கப்பட்டது.

குழந்தைகளிடம் பயிற்றுனர் விதை முளைத்தல் பற்றி கூறி விதை முளைக்க போடப்பட்டது. சில நாட்களுக்கு பிறகு முளைத்த விதையை குழந்தைகள் ஆர்வமுடன் பார்த்து மகிழ்கின்றனர்.



05.07.2019 06.07.2019 ஆகிய நாட்களில் வித்யாரம்ப கிளை அலுவலகத்தில் (விஜய அச்சம்பாடு) வைத்து ELE திட்டத்தின் புதிய ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. இதில் அனைத்து Staff களும் கலந்து கொண்டனர்



08.07.2019 . 09.07.2019 ELE மையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்களுக்கு diagnostic Test வைக்கப்பட்டது.



10.07.2019 ---18.07.2019 ELE மையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்களுக்கு diagnostic Test வைக்கப்பட்டது. (VII STD & VI STD)



20.07.2019 அன்று கூடங்குளம் (T.D.T.A ST.ANDREW'S & ST.ANNE'S HR.SEC SCHOOL துரைகுடியிருப்பு (ST.JOSEPH'S

HIGH SCHOOL ) ஆகிய பள்ளிகளுக்கு ULLAS SCHOLARSHIP வழங்கப்பட்டது.

26.07.2019 அன்று NAVALADI D.M.N.S HR.SEC.SCHOOL), ITTAMOZHI (A.V.JGOVT.HR.SEC.SCHOOL,VIJAYAACHAMPAU S.A HIGH SCHOOL) TISAIYANVILAI (RAMAKRISHNA HR.SEC.SCHOOL, SAMARIAH ST.JOHNS HR.SEC.SCHOOL) KUTTAM (GOVT.HIGH SCHOOL) ஆகிய பள்ளிகளுக்கு ULLAS SCHOLARSHIP வழங்கப்பட்டது.



01.08.2019 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு Library மையங்களும் திருநெல்வேலி மாவட்டத்தில் 8 Library மையங்களும் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 220 குழந்தைகள் பயின்று வருகிறார்கள்.





01.08.2019 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் சமூகரெங்கபுரத்தில் ELM மையம் ஆரம்பிக்கப்பட்டது.



01.08.2019 அன்று SUMMIT வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.

10.08.2019 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் விஜய அச்சம்பாடு கிளை அலுவலகத்தில் வைத்து Follow up Training கொடுக்கப்பட்டது. இதில் 38 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி. பிரபாவதி அவர்கள், Dist. Coordinator திருமதி. முத்துச்செல்வி, ELE ஆசிரியர்கள், Toy van Trainers, மதீப்பிட்டாளர்கள், Office Staff, அனைவரும் கலந்துகொண்டனர். தமிழ்த்தாய் வாழ்த்துடன் பயிற்சி ஆரம்பமானது. பின் warm up செய்யப்பட்டது. பாடல்கள் பாடப்பட்டது.



13.08.2019 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் வட்டவிளையில் வைத்தும் follow up training திருமதி. பிரபாவதி அவர்களால் கொடுக்கப்பட்டது. இதில் 14 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். kids, junior, senior என மூன்று குரூப் ஆக பிரிக்கப்பட்டு syllabus மற்றும் சமச்சீர் புக் பற்றி சொல்லிக்கொடுக்கப்பட்டது.



27.08.2019 நமது அறக்கட்டளையின் நிறுவனர் மறைந்த திரு.V.ரெங்கநாதன் ஐயா அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

நமது திருநெல்வேலி மாவட்ட கௌரவ ஒருங்கிணைப்பாளர் அவர்களின் மகன் திரு. பிரின்ஸ்பேரின்ப ராஜ் அவர்கள் கலந்து கொண்டார்கள். ஐயா அவர்களின் பிறந்தநாளில் ஆடலும் பாடலும், (VT Song book) அறிவோம் அறிவோம் (Science practical book) ஆங்கில இலக்கண புத்தகம் வெளியிடப்பட்டது. ( ELE Activity book)



03.10.2019, 04.10.2019 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் விஜய அச்சம்பாடு கிளை அலுவலகத்தில் வைத்து மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி பிரபாவதி அவர்களால் 2nd Term Training கொடுக்கப்பட்டது. இதில் மதீப்பிட்டாளர்கள், ELE ஆசிரியர்கள், Office Staff, மையபயிற்றுனர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

03.10.2019, 04.10.2019 ஆகிய நாட்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வட்டவிளையில் வைத்து திருமதி முத்துச்செல்வி, செல்வி மலர் மற்றும் செல்வி சிவகாமி அவர்களால் 2nd Term Training கொடுக்கப்பட்டது. இதில் 11.10.2019 முதல் VT மைய குழந்தைகளுக்கு MID TEST எடுக்கப்பட்டது.



# இராமேஸ்வரம் மாவட்டம்





07.06.2019 – 11.06.2019 ஆகிய நாட்களில் பயிற்றுனர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. இப்பயிற்சியின் ஆரம்ப கட்டமாக 07.06.2019 இறைவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இதில் விவேகானந்த கேந்திர செயலாளர். திரு. வாசுதேவ்ஜி அவர்கள், திரு. பரன்ஜி அவர்கள் (கருணா டிரஸ்ட்) திரு. ஹேக்டேஜி அவர்கள் (பசுமை இராமேஸ்வரம்) திரு. கார்த்திக்கேயன் அவர்கள், திரு. ஸ்ரீதர் அவர்கள் மற்றும் திரு. ராமர் அவர்கள் மற்றும் சகோதரி சரஸ்வதி அவர்களும் கலந்துகொண்டார்கள்.





13.06.2019 அன்று வித்யாரம்பம் மையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. (பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி) மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி. பிரபாவதி, பயிற்சியாளர். செல்வி. சிவகாமி, திருநெல்வேலிமாவட்டத்தைச் சார்ந்த துணை ஒருங்கிணைப்பாளர்கள் திருமதி. டாரணிசாந்தி, திருமதி. சாந்தகுமாரி, விளையாட்டு ஊர்தி பயிற்சியாளர்கள் செல்வி. சங்கீதா மற்றும் கணேஷ் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.




ஜூலை 1 மற்றும் இரண்டாம் நாளில் பசுமை இராமேஸ்வரம் அலுவலகத்தில் பயிற்றுனருக்கான Refresh training மாநில ஒருங்கிணைப்பாளர் வே. பிரபாவதி செல்வி. சிவகாமி ஆகியோரால் நடத்தப்பட்டது. இதில் 34 பயிற்றுனர்களும், மதிப்பீட்டாளர்கள்,உதவி ஒருங்கிணைப்பாளர், பயிற்சியாளர் மற்றும் பசுமை இராமேஸ்வர்த்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. கார்த்திக்கேயன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.




19.07.2019 அன்று மாவட்ட ஆட்சி தலைவர். திரு. வீரராகவ் அவர்கள் பேசும்பொழுது (Government and Non-government) நாம் இணைந்துசெயல்பட்டு இம் மாவட்டத்தில் மாற்றத்தை கொண்டு வருவோம் என பேசினார். அதன்பின் NSE நிறுவனம் சார்பில் 20 கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சி தலைவருடன் திருமதி. ரமா மோகன் அவர்கள் ஒப்பந்தம் செய்து கையொப்பமிட்டார்கள். திரு. ஸ்ரீதர் அவர்கள் நன்றியுரை கூறினார்.



24.07.2019 அன்றுசத்வா திட்டதணிக்கை நிறுவனத்தைச் சார்ந்த சிநேகா அவர்கள் நமது மையங்களை பார்வையிட வந்தார்கள் project பற்றி discuss செய்தார்கள். . 25.07.2019 காட்டுபிள்ளையார் கோவில் (old) மையத்தை பார்வையிட்டார்கள். பயிற்றுனர் பாடம் நடத்தும் முறை மற்றும் குழந்தைகளின் திறன் மற்றும் மதிப்பீட்டாளரின் பணி என்ன? ஒருங்கிணைப்பாளர் பணி என்ன? என ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக கலந்துரையாடப்பட்டது. மையத்தின் செயல்பாடுகள் பற்றி தலைமை ஆசிரியருடனும் பேசினார்கள். மையங்களை பார்வையிட்டார்கள்.



Paper dice உருட்டி விட்டு அதில் உருவாகும் வார்த்தைகளை எழுதி தவறானது எது சரியானது எது என குழந்தைகளே திருத்துவது.





01.08.2019 அன்று பசுமை இராமேஸ்வரம் அலுவலகத்தில் வைத்து பயிற்றுனர்களுக்கான பின்தொடர் பயிற்சி நடைபெற்றது. இதில் 33 பயிற்றுனர்களும் ஒருங்கிணைப்பாளர் மற்றும் மதிப்பீட்டாளர்கள் கலந்துகொண்டார்கள்.




ஆகஸ்ட் 27ஆம் நாள் அன்று நமது நிறுவனர் மறைதிரு. V. ரெங்கநாதன் ஐயா பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. பசுமை இராமேஸ்வரம் பொறுப்பாளர். திரு. ஹேக்டே ஜி அவர்களும், காந்தி கிராமம். திட்ட மேலாளர் திரு. சந்திதரசேகர் அவர்களும் விளக்கேற்றினார்கள். அன்று ஆடலும் பாடலும், அறிவோம், ஆங்கில இலக்கண புத்தகமும் வெளியிடப்பட்டது. 5 Project ஐ சேர்நதவர்களும், கலந்து கொண்டார்கள். (திரு. பரஞ்ஜி, திரு. ஸ்ரீதர், திரு. ராமர்,. ஒருங்கிணைப்பாளர் திரு. கார்த்திகேயன் மற்றும் வெங்கடேஸ் மற்றும் அனைத்து சகோதரிகளும்)



ஆகஸ்ட் 6, 16, 17, 18, 28 மற்றும் கிராம முன்னேற்ற கூட்டம் நடைபெற்றது. இதில் வித்யாரம்பம் அதன் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றியும், NSE foundation மூலம் நடக்கக்கூடய திட்டங்கள் பற்றியும் அதன் செயல்பாடு பற்றியும், ஆசிரியரும் பெற்றோரும் இணைந்து குழந்தைகளுக்கு பாலமாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் கூறப்பட்டது.



செப்டம்பர் 21மற்றும் அக்டோபர் 11, 12 ஆகிய நாட்களில் இரண்டாம் பருவபயிற்சி (KIDS, JUNIOR & SENIOR ) நடைபெற்றது.





18.10.2019 அன்று சத்வா திட்டதணிக்கை நிறுவனத்தைச் சார்ந்த செல்வி. தாருணி அவர்கள் நமது மையங்களை பார்வையிட்டார்கள். project பற்றி ஒருங்கிணைப்பாளர் மற்றும் மதிப்பீட்டாளர்களிடம் கலந்துரையாடினார்கள்.

மதிப்பீட்டாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். 11 மணி அளவில் எண் 1, 2,காட்டுபிள்ளையார் கோவில் (new), தங்கச்சிமடம் மையங்களை பார்வையிட்டார்கள். குழந்தைகளின் கணிதத் திறனை சோதித்தறிந்தார். பயிற்றுனர் பாடம் நடத்தும் முறை மற்றும் குழந்தைகளின் திறன் மற்றும் மையத்தின் செயல்பாடுகள் பற்றி தலைமை ஆசிரியருடனும் பேசினார்கள். அக்காள் மடம் பெற்றோர்களை சந்தித்து நமது திட்டங்களைப்பற்றியும் பயனுள்ளதாக உள்ளதா என கேட்டறிந்தார்கள்.

## தூத்துக்குடி மாவட்டம்



29.05.19 முதல் 31.05.19 வரை சென்னையில் தலைமை அலுவலகம் சார்பாக Youth Hostel ல் நடைபெற்ற I TERM பயிற்சியில் சங்கரன்கோவில் கிளை தொண்டர்கள் கலந்து கொண்டார்கள். நிறைவாக இருந்தது.



13.06.19, 14.06.19, 15.06.19 ஆகிய மூன்று தினங்களில் KIDS, SCJ, SCS மைய ஆசிரியர்களுக்கு I TERM பயிற்சி ஆரம்பமானது. இதில் பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். வித்யாரம்ப பொருள்களை பயன்படுத்தி தமிழ், ஆங்கிலம், கணிதம் கற்பிக்கப்பட்டது. மேலும் 20.06.19, 21.06.19, 22.06.19 ஆகிய மூன்று தினங்களில் விடுபட்ட பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர்.



22.06.19, 23.06.19 ஆகிய இருதினங்கள் மதுரை மாவட்டம் சுந்தராஜன்பட்டி கிராமத்தில் வைத்து I TERM TRAINING நடைபெற்றது. ஆசிரிய மதிப்பீட்டளர் திருமதி. S. ரேவதி உள்பட 7 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். வித்யாரம்ப பொருள்களை பயன்படுத்தி தமிழ், ஆங்கிலம், கணிதம் கற்பிக்கப்பட்டது. 24.06.19 அன்று மதுரை மாவட்டம் மைய குழந்தைகளுக்கு Pre test வைக்கப்பட்டது.



01.07.19 அன்று முதல் 04.07.19 வரை சங்கரன் கோவில் வட்டம் மைய குழந்தைகளுக்கு Pre test வைக்கப்பட்டு, மையங்கள் வித்யாரம்ப தொண்டர்கள் அனைவராலும் ஆரம்பிக்கப்பட்டது.



04.07.19 அன்று மதுரை மாவட்டம் விடுபட்ட மைய குழந்தைகளுக்கு Pre test வைக்கப்பட்டு, மையங்கள் தொண்டர்களால் ஆரம்பிக்கப்பட்டது.



08.07.19, 09.07.19 ஆகிய இருதினங்கள் சங்கரன்கோவில் வட்டத்தில் உள்ள 4 பள்ளிகளில் நடைபெறும் ELE மைய மாணவர்களுக்கு Diagnostic Test நடைப்பெற்றது. அதை தொடர்ந்து ELE மையங்கள் தொண்டர்களால் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்கள் ஆர்வமுடன் இருக்கிறார்கள்.



01.08.19 அன்று சங்கரன்கோவில் வட்டத்தில் உள்ள 10 வித்யாரம்ப மைய ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. குழந்தைகள் ஆர்வமுடன் நூல்களை படிக்கிறார்கள்.



01.08.19 அன்று சங்கரன்கோவில் வட்டத்தில் உள்ள குவளைக்கன்னி கிராமத்தில் ELM மையம் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்களுக்கு Pre Test நடைப்பெற்றது. மாணவர்கள் ஆர்வமுடன் இருக்கிறார்கள்.

08.08.19 அன்று மதுரை மாவட்டத்தில் உள்ள 2 வித்யாரம்ப மைய ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. குழந்தைகள் ஆர்வமுடன் நூல்களை படிக்கிறார்கள்.

09.08.19, 10.08.19 ஆகிய இருதினங்களில் KIDS, SCJ, SCS மைய ஆசிரியர்களுக்கு I TERM REFRESH TRAINING ஆரம்பமானது. மைய பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். வித்யாரம்ப

பொருள்களை பயன்படுத்தி தமிழ், ஆங்கிலம், கணிதம் எவ்வாறு கற்பிக்கப்பட்டது என கேட்டறியப்பட்டது. மேலும் சமச்சீர் பாடப்புத்தகத்தின் பயிற்சி நடைப்பெற்றது.






16.08.19 அன்று சங்கரன்கோவில் வட்டத்தில் உள்ள 4 பள்ளிகளில் நடைபெறும் ELE மைய மாணவர்களுக்கு, ரெங்கசமுத்திரம் கிராமத்தில் உள்ள அமல அன்னை உயர்நிலைப்பள்ளியில் வைத்து Touch the soil program நடைப்பெற்றது. அதை தொடர்ந்து 35 மாணவர்களுக்கு Ullas Trust தொண்டர்களால் உதவித்தொகை காசோலை வழங்கப்பட்டது. இதில் நமது முன்னாள் ஒருங்கிணைப்பாளர் திரு. A. முத்துக்குமாரசாமி அவர்கள் அவரது பள்ளியின் சார்பாக 5 மாணவர்களுடன் கலந்து கொண்டார்.



21.08.19, 22.08.19 ஆகிய இருதினங்கள் மதுரை மாவட்டம் சுந்தராஜன்பட்டி கிராமத்தில் வைத்து I TERM REFRESH TRAINING நடைபெற்றது. ஆசிரிய மதிப்பீட்டளர் திருமதி. S. ரேவதி உள்பட 7 மைய ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். ஆங்கிலம் அதிக கவனம் எடுத்து கற்றுத்தரப்பட்டது. மேலும் இருதினங்களும் அங்குள்ள 7 மையங்களை பார்வையிடப்பட்டு பயிற்சியின் இறுதியில் மையங்களை பற்றி ஆசிரியர்களுடன் கலந்துரையாடப்பட்டது.






27.08.19 அன்று அலுவலகத்தில் திரு. V. ரெங்கநாதன் ஐயா அவர்களின் 82 பிறந்த நாள் சங்கரன்கோவில் வித்யாரம்ப அலுவலக தொண்டர்களால் கொண்டாடபட்டது. அவரின் நினைவாக ஆடலும் பாடலும், அறிவோம் அறிவோம், English Grammer Activity Book ஆகிய 3 புத்தகங்கள் வெளிடப்பட்டது. மாநில துணை ஒருங்கிணைப்பாளர் திருமதி. R. கோமதி வெளியிட முன்னாள் ஒருங்கிணைப்பாளர் திரு. A. முத்துக்குமாரசாமி அவர்களும், தன்னார்வ தொண்டர் திரு. P. வேல்முருகன் அவர்களும் பெற்றுக்கொண்டார்கள். திரு. V. ரெங்கநாதன் ஐயா அவர்களை நினைவூட்டி, மரியாதை செலுத்தப்பட்டது.



25.09.2019 முதல் 27.09.2019 வரை சென்னையில் தலைமை அலுவலகம் சார்பாக Youth hostel -ல் நடைபெற்ற II TERM பயிற்சியில் சங்கரன்கோவில் கிளை தொண்டர்கள் கலந்துகொண்டார்கள். நிறைவாக அமைந்தது.



04.10.2019, 05.10.2019, 12.10.2019 ஆகிய மூன்று தினங்களில் KIDS, SCJ, SCS, ELM, SMLC ஆசிரியர்களுக்கு II TERM பயிற்சி ஆரம்பமானது. இதில் பயிற்றுனர்கள் கலந்துகொண்டனர்.

16.10.2019, 17.10.2019 ஆகிய இருதினங்களில் விடுபட்ட KIDS, SCJ, SCS, ELM, SMLC ஆசிரியர்களுக்கு II TERM பயிற்சி ஆரம்பமானது. இதில் பயிற்றுனர்கள் கலந்துகொண்டார்கள். தொடர்ந்து தனது மையங்களில் ஆசிரியர்கள் அஞ்சலறை பெட்டியின் விதைகளை விதைத்து காண்பித்தார்கள்.



17.10.2019, 18.10.2019 ஆகிய இருதினங்களில் மதுரை மாவட்டம் சுந்தரராசன்பட்டி கிராமத்தில் வைத்து II TERM பயிற்சி நடைபெற்றது 7 ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். மேலும் மைய குழந்தைகளுக்கு Mid test வைக்கப்பட்டது.







21.10.2019 அன்று முதல் 25.10.2019 வரை சங்கரன்கோவில் வட்டம் மைய குழந்தைகளுக்கு Mid test வைக்கப்பட்டது.

# நாகப்பட்டினம் மாவட்டம்




13-06-19, 14-6-19, 15-6-19 இத்தினங்களில் நாகை மாவட்டத்தில் சீர்காழி கிளை அலுவலகத்தில் முதல் பருவத்திற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. 13-6-19, 14-6-19 ஆகிய நாட்களில் இளநிலை மற்றும் முதுநிலை மையத்திற்கான பயிற்சிகளும், 15-6-19 அன்று மழலையர் மையத்திற்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டது. இதில் 38 பயிற்றுநர்கள் கலந்துகொண்டனர்.



01-.07-2019 அன்று அனைத்து வித்யாரம்பம் மையங்களும் ஆரம்பிக்கப்பட்டது.

05-7-19 அன்று English மற்றும் Library training அளிக்கப்பட்டது. 10 Library பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.









20-07.2019 அன்று Ullas Trust – ன் மூலம் நடத்திய Touch the Soil Program திருவெண்காடு சு.சு.தே. பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதில் திருவாலி, மேலச்சாலை மற்றும் அகரப்பெருந்தோட்டம் ஆகிய பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துக் கொண்டனர். மேலும் இப்பள்ளியில் பயிலும் 9 மற்றும 10-ம் வகுப்பு மாணவர்களில் முதல் 5 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு Ullas Trust -ன் மூலம் ஊக்கத்தொகை வழங்கினார்கள்.



01.08.2019 அன்று பழையபாளைய கிராமத்தில் உள்ள P.U.P School - ல் ELM மையம் ஆரம்பிக்கபட்டது.

17.08.2019 அன்று மைய ஆசிரியர்களுக்கான Follow Up Training நடைபெற்றது. இந்த Training – ல் மையத்தில் நடத்தும் வித்யாரம்ப பொருள்களில் ஏற்படும் சந்தேகங்களுக்கும், பாடத்திட்டத்திலுள்ள செயல்பாடுகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் மையத்திற்கு குறித்தநேரத்தில் செல்வதற்கும், குழந்தைகளிடம் அன்பாக நடந்து கொண்டு குழந்தைகளுக்கு விளையாட்டுகளும், பாடல்களும் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. ஒவ்வொரு வாரத்தில் உள்ள வெள்ளி கிழமைகளில் வித்யாரம்பம் உபகரணங்களை கொண்டு Activity, Phonic Sound – யை பயன்படுத்தி சிறு சிறு வார்த்தைகளை படிக்கவும், தினந்தோறும் வாய்பாடு சொல்லிக் கொடுக்குமாறு ஆசிரியரிடம் கூறப்பட்டது. அனைத்து மைய ஆசிரியர்களுக்கும் புதிய Kit Box கொடுக்கப்பட்டது.









24.08.2019 அன்று Sri Annaperumal Nursery Primary School & Sri Padmavathi Nursery Primary School ஆகிய பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு நமது வித்யாரம்பம் பொருட்களை பயன்படுத்தி குழந்தைகளுக்கு எவ்வாறு கல்வியை கற்க வேண்டும் என்பதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. அப்பொழுது செம்பனார்கோவில் AEEO திரு.சீனிவாசன் சார் அவர்கள் நமது வித்யாரம்பம் அலுவலகத்திற்கு வருகைப்புரிந்து ஆசிரியர்களுக்கு சிறப்பு அறிவுரைகளை வழங்கினார்.



27.08.2019 அன்று வித்யாரம்ப அறக்கட்டளையின் தலைவர் V. ரெங்கநாதன் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடபட்டது. அதில் சீர்காழி அலுவலகத்தில் உள்ள திருமதி. T. கார்த்திகா மேடம், ஒருங்கிணைப்பாளர், மதிப்பீட்டாளர்கள், கணிணி பயிற்றுனர்கள் மற்றும் காரைமேடு பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி.பிரேமா அவர்கள் கலந்து கொண்டனர். அந்நாளில் புதியதாக உருவாக்கப்பட்ட வித்யாரம்ப பாடல் புத்தகம், English Activity Book, மற்றும் அறிவியல் செயல்பாடு புத்தகம் வெளியிடப்பட்டது.





11.09.2019 அன்று திருமதி.பிரேமா மேடம் மற்றும் திருமதி.ஆனந்தி மேடம் அவர்கள் சீர்காழி அலுவலகத்திற்கு விஜயம் செய்து ஆசிரியர்களுக்கு, பூதக்கண்ணாடி, தராசு, வாய்பாடுகள் மற்றும் அளவு நாடா வைத்து நீளம், அகலம் சொல்லி கொடுத்தனர். மேலும் உடற்பயிற்சி, டம்ளர் வைத்து Heartbeats, Action Word, Resource Centre Development, மையத்தில் குழு அமைப்பது பற்றியும், அறிவியல் செயல்பாடுகளில் உள்ள பூ வேரிடம் பேசுவது, முதுகில் எழுத்துக்கள் எழுதுவது, Maths Symbol, ஆசிரியர் வகுப்பறையில் நின்றுக்கொண்டு பாடம் எடுப்பது மற்றும், தமிழில் ெ, ே, ா, ை, இவற்றை பற்றி ஆசிரியர்களிடம் கலந்துரையாடினார்.

21.09.2019 அன்று ஆலவேலி கிராமத்தில் கல்வி வளர்ச்சி கூட்டம் நடைப்பெற்றது அக்கூட்டத்தில் நம் மையத்தில் படிக்கும் குழந்தைகளின் கல்வி நிலையைப்பற்றி குழந்தைகளின் பெற்றோர்களிடம் பேசப்பட்டது.

சீர்காழி கிளை அலுவலகத்தில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட வளமையத்தை (Resource Center) திருமதி. பிரேமா மேடம் அவர்கள் பார்வையிட்டு வளமையத்தை முறையாக பயன்படுத்துவது எப்படி என்பதை பற்றியும், கற்றல் உபகரணங்களை மேம்படுத்தவும், ஆசிரியர்களின் கற்றல் சார்ந்த புதிய யோசனைகளை நடைமுறைபடுத்தவும், வளமையப் பொருட்களிலிருந்து பல்வேறு கேள்வி பதில் அட்டைகளை உருவாக்கி குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கும் முறையை வளமைய உறுப்பினர்களுக்கு விளக்கி கூறினார்.










03-10-2019, 04-10-2019, 05-10-2019 இத்தினங்களில் இரண்டாம் பருவத்திற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. 03-10-2019 அன்று மழலையர் மையத்திற்கான பயிற்சிகளும் 04-10-19, 05-10-19 ஆகிய நாட்களில் இளநிலை மற்றும் முதுநிலை மையத்திற்கான பயிற்சிகளும், அளிக்கப்பட்டது. இதில் 38 பயிற்றுநர்கள் கலந்துகொண்டனர்.



08.10.2019 அன்று சீர்காழி வித்யாரம்ப கிளை அலுவலகத்தில் சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட்டது. இதில் ஒருங்கிணைப்பாளர், மதிப்பீட்டாளர்கள், ELE ஆசிரியர்கள் மற்றும் கணிணி பயிற்றுனர்கள் கலந்துகொண்டனர். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கபட்டது.

16.10.2019 அன்று SCJ, SCS மையங்களுக்கு Mid Test Report எடுக்கப்பட்டது.



## அரியலூர் மாவட்டம்



13-6-2019 முதல் 16-6-19 வரை மூன்று தினங்களும் அரியலூர் மாவட்டம் திருமானூர் கிளை அலுவலகத்தில் Kids, Junior, Senior – க்கான I-term training நடத்தப்பட்டது. அதில் சுமார் 50 பேர் கலந்து கொண்டனர். அனைத்து பயிற்றுனர்களும் நன்றாக பயிற்சி எடுத்துக்கொண்டனர். பிறகு 16-6-19 அன்று பயிற்றுனர் தேர்வு செய்யப்பட்டனர்.



1-7-19 அன்று 16 கிராமங்களில் 45 மையங்கள் திறக்கப்பட்டன. மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வகுப்பிற்கு வந்தனர்.



8-7-2019 அன்று 4 பள்ளிகளில் 7th மற்றும் 8th பயிலும் மாணவர்களுக்கு ELE வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.



12-7-19 அன்று 4 பழைய நூலக மையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. அனைத்து மாணவர்களும் புத்தகங்களை ஆர்வமுடன் எடுத்து, விரும்பி படித்தனர்.



ஆகஸ்ட் மாதம் அனைத்து மையங்களுக்கும் VDG Parents Meeting போடப்பட்டது. அதில் அனைத்து பெற்றோர்களும் கலந்துக்கொண்டு குழந்தைகளின் நிலையை பற்றி தெரிந்துக்கொண்டனர்.



1-8-2019 அன்று அன்னிமங்கலம் கிராமத்தில் ELM மையமும் மற்றும் புதிய 11 நூலகங்களும் ஆரம்பிக்கப்பட்டது.



17-8-19 அன்று இலந்தைக்கூடம் கிராமத்தில் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் Ullas Scholarship Program நடைப்பெற்றது. அதில் 4 பள்ளியிலிருந்து அனைத்து மாணவர்களும் மற்றும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். இதில் 42 மாணவர்களுக்கு 1000 ரூபாய் அடங்கிய காசோலை வழங்கி அவர்களை படிப்பதற்கு ஊக்கப்படுத்தினர்.

17-8-19 அன்று திருமானூர் அலுவலகத்தில் அனைத்து பயிற்றுனர்களுக்கும் Follow up Training வழங்கப்பட்டது. இறுதியில் பிரேமா Mam பயிற்றுனர்களுடன் Video call மூலம் பேசினார்.



27-08-2019 அன்று வித்யாரம்ப அறக்கட்டளையின் தலைவர் V. ரெங்கநாதன் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடபட்டது அவர்களின் பிறந்தநாளையொட்டி புத்தக வெளியீடு நிகழ்ச்சி இலந்தைக்கூடம் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் நடைப்பெற்றது. இதில் திரு.T.K.S கைலாசம், பிரேமா Mam மற்றும் ஆனந்தி Mam, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், தலைமையாசிரியர்கள், பெற்றோர் கூட்ட தலைவர், கிராம நிர்வாக அலுவலர், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.





28-08-2019 அன்று விளாகம், குலமாணிக்கம், அன்னிமங்கலம் ஆகிய கிராமங்களுக்கு பிரேமா Mam, T.K.S. கைலாசம் Sir, சத்யபிரியா மற்றும் ஹேமா மையங்களை பார்வையிட்டனர். இலந்தைக்கூடம், கோவில்எசனை மற்றும் திருமானூர் ஆகிய கிராமங்களுக்கு ஆனந்தி Mam, விமலா மற்றும் ரோஸிமரியாள் அவர்களால் மையங்கள் மற்றும் நூலகங்கள் பார்வையிட்டப்பட்டது.



29-08-2019 அன்று 10 மணியளவில் திருமதி. பிரேமா மேம் அவர்களால் திருமானூர் அலுவலகத்தில் பயிற்றுனர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. அதில் அனைத்து பயிற்றுனர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் கலந்து கொண்டனர். பயிற்றுனர்கள் அவர்களின் மையங்களின் நிலையை பற்றி கூறினார்கள்.

25, 26, 27-09-2019 அன்று சென்னையில் II-Term training வழங்கப்பட்டது. அதில் அரியலூர் பகுதியில் இருந்து விமலா மற்றும் சத்யபிரியா பயிற்சி எடுத்துக்கொண்டனர்.





3-10-2019 அன்று Kids II-Term training திருமானூர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது. அதில் அனைத்து பயிற்றுனர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் கலந்துக்கொண்டனர்.

7-09-2019 அன்று ஆயுத மற்றும் சரஸ்வதி பூஜையை திருமானூர் அலுவலகத்தில் அனைவரும் கொண்டாடினோம்.





9-10-2019 அன்று Junior II-Term training திருமானூர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது. அதில் அனைத்து பயிற்றுனர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் கலந்துக்கொண்டனர்.





10-10-2019 அன்று Senior II-Term training திருமானூர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது. அதில் அனைத்து பயிற்றுனர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் கலந்துக்கொண்டனர்.

14, 15, 16-10-2019 அன்று Junior மற்றும் Senior மையங்களுக்கு Mid-test suttru எடுக்கப்பட்டது.

## திருச்சி மாவட்டம்

13-06-2019 மற்றும் 14-6-2019 ஆகிய இரு தினங்களும் திருச்சி மாவட்டத்தில் புள்ளம்பாடி கிளை அலுவலகத்தில் முதல் பருவத்திற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. 13-6-2019 அன்று மழலையர் மையத்திற்கான பயிற்சிகளும், 14-6-19 அன்று இளநிலை மற்றும் முதுநிலை மையத்திற்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டது. இதில் 38 பயிற்றுநர்கள் கலந்துகொண்டனர்.



24-6-19 அன்று அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும், வித்யாரம்பம் பாடத்திட்டத்தின் Literature- ல் சில மாறுதல்கள் செய்வதற்காக சென்னையில் நடைபெற்ற meeting – ல் கலந்துக் கொண்டோம்.

29-6-19 மற்றும் 30-6-19 ஆகிய இருதினங்களும் திண்டுக்கல் மாவட்டத்தில், அய்யம்பாளையம் கிராமத்தில் உள்ள மெயின் பள்ளியில் I – st term training மூன்று மையங்களுக்கான அனைத்து பயிற்சிகளும் அளிக்கப்பட்டது. இதில் 24 பயிற்றுநர்கள் கலந்துகொண்டனர். 1-7-19 அன்று திண்டுக்கல் மாவட்டத்தில் 4 கிராமங்களில் 5 மழலையர் மையங்களும், 14 இளநிலை மற்றும் உறுதுணை கல்வி மையங்களும், 1-7-19 முதல் 3-7-19 ஆகிய மூன்று தினங்களில் திருச்சி மாவட்டத்தில் 15 கிராமங்களில் 13 மழலையர் மையங்களும், 26 இளநிலை மற்றும் உறுதுணை கல்வி மையங்களும், மற்றும் இரண்டு SMLC மையங்களும் ஆரம்பிக்கப்பட்டது. 6-7-19 அன்று English மற்றும் Library training அளிக்கப்பட்டது. 15 Library பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.



8-7-19 அன்று திருச்சி மாவட்டத்தில் 15 கிராமங்களில் 15 Library மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது 385 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.



திண்டுக்கல் மாவட்டத்தில் 5 கிராமங்களில் 5 Library மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது 182 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.



ELE – ல் 8-7-19 முதல் 17-7-19 வரை 9 கிராமங்களில் 6 மற்றும் 8 வகுப்பு மாணவர்களுக்கு 24 மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது 746 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

13-7-19 – அன்று திருச்சி மாவட்டம், ஊட்டத்தூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் திரு. கண்ணன் அவர்கள் தலைமையில் Ullas trust – லிருந்து Ullas volunteers Mr. Velraj and Mr. Guru ஆகியோர்களால் "Touch the soil" programme சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் 5 பள்ளிகளில் உள்ள முதல் 5 Toppers – களுக்கு Scholarship வழங்கப்பட்டது. இதில் 400 குழந்தைகள் கலந்து கொண்டனர்.



30-7-19 அன்று திருச்சி மாவட்டம், புள்ளம்பாடி கிளை அலுவலகத்தில் ELM training அளிக்கப்பட்டது. 1-8-19 அன்று ஆலம்பாடி கிராமத்தில் ELM மையம் ஆரம்பிக்கப்பட்டு இதில் 32 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.







16-8-19 முதல் Ullas trust-ன் SUMMIT Programme 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு, 5 கிராமங்களில் 6 மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது 250 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

7-8-19 மற்றும் 24-8-19 இரு தினங்களில் followup training நடத்தப்பட்டது. இதில் அனைத்து material- களையும் ஒவ்வொருவரிடமும் கொடுத்து செய்து காண்பித்தனர். மற்றும் மையத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் நிறை, குறைகள் பற்றி பேசப்பட்டு அதற்கான தீர்வுகள் அளிக்கப்பட்டது. மேலும், வித்யாரம்பம் புதிய உபகரணங்கள் பயிற்றுநர்களிடம் கொடுக்கப்பட்டது.



27-8-19 நமது வித்யாரம்பம் அறக்கட்டளையின் தலைமை நிறுவனர் திரு. ரெங்கநாதன் ஐயா அவர்களின் பிறந்த நாள் சீரும் சிறப்புமாக் சிறப்பு விருந்தினர் திருமதி.கலாதேவி அவர்கள் முன்னிலையில் புதிய மூன்று புத்தகங்கள் வெளியிடப்பட்டது. அன்று பார்வையிட சென்ற வரகுப்பை கிராமத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு கடலைமிட்டாய் வழங்கப்பட்டது.





29-8-19 வரை தலைமை அலுவலகத்திலிருந்து திருமதி. பிரேமா மேம் மற்றும் ஆனந்தி மேம் அரியலூர் மாவட்டத்தின் மையங்களை பார்வையிட வந்திருந்தனர். அவர்களுடன் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் கலந்து கொண்டு, அரியலூர் மாவட்டம் இலந்தைகூடம் கிராமத்தில் பெற்றோர்கள் முன்னிலையில் VR sir birthday சிறப்பாக கொண்டாடப்பட்டு, மையங்கள் பார்வையிடப்பட்டது.

06-09-2019 அன்று Ullas trust - y; நடத்தப்பட்ட “Can do workshop” -ற்கு திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துக்கொண்டனர். மதியம் தலைமை அலுவலகத்திற்கு அழைத்து பல ஆலோசனைகளை திருமதி. பிரேமா மேம் மற்றும் ஸ்ரீமதி மேம் வழங்கினார்கள்.



14-9-2019 அன்று திரு. தாமோதரன் சாரின் நண்பர் மற்றும் திரு.




இராஜாராம் அவர்கள் தேவரப்பன்பட்டி கிராமத்தில் உள்ள மையங்களை பார்வையிட வந்தனர். அதில் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும், மதிப்பீட்டாளர் இராமேஸ்வரி மற்றும் பயிற்றுநர்கள் கலந்துக்கொண்டனர்.



3-10-2019, 4-10-19, 5-10-19 ரு 9-10-19 ஆகிய நான்கு நாட்களில் **II Term training** அளிக்கப்பட்டது. இதில் 34 ஆசிரியர்களும் கலந்துக்கொண்டனர்.

முதல் நாள் - Yoga & English. இரண்டாவது நாள் - Tamil & Maths. மூன்றாவது நாள் - Science, kids Maths & Material Demo காண்பிக்கப்பட்டது.







9-10-19 வழ 11-10-19 ஆகிய மூன்று தினங்களும் திருமதி. பிரேமா மேம், திரு. பால் சார், திருமதி. லதா மேம் மற்றும் திருமதி. ரோஸி மரியாள் ஆகியோரால்RVS பள்ளி பார்வையிடப்பட்டது. மேலும் ஆசிரியர்களுக்கும், குழந்தைகளுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டது. ( I day - Tamil ( 3rd, 4th , 5th std). II day – Tamil (2nd std & afternoon 1st std , III day – ELE Session to teachers ( 3rd, 4th, 5th teachers only - Yoga , puzzle, Story, (Hints developing), Tense - Perfect).



10-10-19 முதல் 29-19-10-19 II சுற்று ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்பட்டது.

17-10-19 முதல் 18-10-19 ஆகிய இரு நாட்களில் திண்டுக்கல் மாவட்டத்தில் அய்யம்பாளையம் மெயின் பள்ளியில் இரண்டாம் பருவ பயிற்சி அளிக்கப்பட்டது. அனைத்து பயிற்றுநர்களும் கலந்துக்கொண்டனர்.

## ரோட்டரி வித்யாரம்பம் பள்ளி, சாமந்தான்பேட்டை - நாகப்பட்டினம்

13.06.2019 – 2019-2020 ம் கல்வி ஆண்டிற்கான பள்ளி திறப்பு நடைப்பெற்றது.

13.06.2019 பள்ளி தாளாளர் வித்யாரம்பம் கணக்காளர் அவர்கள் பள்ளிக்கு வருகைப் புரிந்தார்கள். அன்றே ஆனந்தம் அறக்கட்டளையைச் சேர்ந்த திரு பாலசுப்ரமணியன் மற்றும் திருமதி லதா அவர்களும் பள்ளிக்கு வருகைப்புரிந்தார்கள். அவர்களை பள்ளி தாளாளர் அவர்கள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தார்கள்.



மதியம் 11.00 மணியளவில் 2019-2020 ம் கல்வி ஆண்டிற்கான UKG வகுப்பு சேர்க்கை நடைப்பெற்றது. புதியதாக சேரும் மாணவர்களுக்கு ஐந்து திறன் வளர்ச்சிக்கான மணிக்கோர்த்தல், கயிறின்மேல் நடத்தல், பந்தைப்பிடித்தல், விதைகளை எண்ணுதல், பந்தைப்பிடித்தல், டயரைத் தாண்டுதல் போன்றன **(நுண் தசை வளர்ச்சி, பெருந்தசை வளர்ச்சி, மொழித்திறன் வளர்ச்சி,அறிவுத்திறன் வளர்ச்சி,கை கண் ஒருங்கிணைப்பு)** வைக்கப்பட்டது. இதில் மணிக்கோர்த்தல், முதல் சேர்க்கைக்கு ஆனந்தம் அறக்கட்டளையைச் சேர்ந்த திருமதி லதா மற்றும் பாலசுப்ரமணியன் அவர்களும் இருந்தார்கள்.

**ஜுன் 14** , காலை இறைவணக்க கூட்டம் நடைப்பெற்றது. இதில் வித்யாரம்ப அறக்கட்டளையின் கணக்காளர், திருமதி மீனா மேடம் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்கள். பின்பு வித்யாரம்பம் மற்றும் பள்ளியைப் பற்றிய தகவல்களை மாணவர்களிடம் எடுத்துக் கூறினார்கள். இதில் பள்ளியின் தாளாளர் அவர்கள் திருமதி மீனா மேடம் அவர்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்தார்கள்.



**ஜுன் 18** அன்று ஆனந்தம் அறக்கட்டளையைச் சேர்ந்த திரு பாலசுப்ரமணியன் மற்றும் திருமதி லதா அவர்களும் பள்ளிக்கு வருகைப்புரிந்தார்கள்.

**ஜுன் 18** அன்று சனிக்கிழமை காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை 4 மற்றும் 5 ம் வகுப்புகளுக்கு ART & CRAFT Work மற்றும் உள் விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டு நடைப்பெற்றது. 1,2,3 வகுப்புகளுக்கு Activity கொடுக்கப்பட்டன.

**ஜூன் 21** அன்று 5 வது உலகயோகா தினம் கடைப்பிடிக்கப்பட்டது. அனைத்து 5 ம் வகுப்பு மாணவர்கள் நடனமாக யோகா செய்து அசத்தினார்கள் மாலையில் சாமந்தான்பேட்டையில் உள்ள அரசுப்பள்ளிக்குச் சென்று யோகா பற்றிய அறிய தகவல்களை கூறினர். யோகாவை நடனமாகவும் செய்தார்கள்.





நமது தி ரோட்டரி சென்ட்ரல் வித்யாரம்பம் பள்ளியில் வன மகா உற்சவ வாரம் 01.07.2019 அன்று முதல் 05.07.2019 வரை கொண்டாடப்பட்டது.

விழாவின் 5-ம் நாள் நாகப்பட்டினம் மாவட்ட பசுமைப்படையின் ஒருங்கிணைப்பாளர் திரு. M . முத்தமிழ்ஆனந்தன் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட வனச்சரகர் திரு.சேகர் அவர்களும் வருகைப்புரிந்தார்கள்.நம் பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கினார்கள். ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் காடுகள் பற்றிய விழிப்புணர்வு நாடகம் ஒன்றையும்,காடுகள் பற்றிய பாடலும், இரு கவிதைகளையும் கூறினார்கள். பிறகு 1 முதல் 4 ம் வகுப்பு மாணவர்கள் ஏற்கெனவே நிகழ்த்திய வன மகா உற்சவம் பற்றிய விழிப்புணர்வு பாடல்கள், நாடகங்கள் , கவிதைகள் போன்றனவற்றை மேடையில் நிகழ்த்தினார்கள். சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களைப் பாராட்டி ஊக்குவித்தார்கள். இறுதியாக பள்ளியின் தோட்டத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.



**ஜூலை 15** கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடப்பட்டது.



**ஜூலை 17.18** வித்யாரம்பம் பள்ளியின் தாளாளர் திருமதி பிரேமா வீரராகவன் மற்றும் வித்யாரம்பம் சிறப்பு ஆங்கில பயிற்சியாளர் திருமதி ‘ஸ்ரீமதி மேடம் அவர்களும் நமது வித்யாரம்பம் பள்ளிக்கு வருகைப் புரிந்தார்கள்.

**ஜூலை 27** Dr.APJ அப்துல்கலாம் அவர்களின் நினைவுநாள் அனுசரிக்கப்பட்டது

**ஜூலை 31 ACT சார்பில்** சிறப்பு இரத்தவகை பரிசோதனை மையம் அமைத்து நம் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு இரத்தவகை கண்டறியப்பட்டு EMIS பதிவேற்றம் செய்யப்பட்டது.

**ஆகஸ்ட் 2** நம் பள்ளியில் பயிலும் முதல் மற்றும் 5 ம் வகுப்பு மாணவர்களுக்கு அரசு சார்பில் தடுப்பூசி போடப்பட்டது.



**ஆகஸ்ட 15** 72 வது சுதந்திர தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மூத்த குடிமக்கள் தேசியக்கொடியை ஏற்றி சிறப்பித்தார்கள். பின்பு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

**ஆகஸ்ட 27** வித்யாரம்பம் அறக்கட்டளையின் தலைவர் மறைதிரு . வி.ரெங்கநாதன் அவர்களின் 82 வது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.



பிறந்தநாளை முன்னிட்டு அனைத்து மாணவர்களுக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. செயல்திட்ட நாள் கொண்டாடப்பட்டு அருகில் உள்ள அரசுப்பள்ளி மாணவர்கள் வருகைப்புரிந்து பார்வையிட்டார்கள் . அவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. செயல்திட்டத்தை செயல்படுத்திய நம் பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



**செப்டம்பர் 5** ஆசிரியர் தினம் அன்று வித்யாரம்பம் பள்ளியின் அனைத்து ஆசியர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஆனந்தம் அறக்கட்டளை சார்பில் இனிப்புகள் வழங்கப்பட்டன.



**செப்டம்பர் 12,13** வித்யாரம்பம் பள்ளியின் தாளாளர் திருமதி பிரேமா வீரராகவன் மற்றும் வித்யாரம்பம் சென்னை ஒருங்கினைப்பாளர் திருமதி ஆனந்தி மேடம் அவர்களும் நமது வித்யாரம்பம் பள்ளிக்கு வருகைப் புரிந்தார்கள்.**செப்டம்பர் 16** அன்று முதல் பருவத்தேர்வு ஆரம்பமானது.



**செப்டம்பர் 23** அன்று முதல் பருவத்தேர்வு முடிந்து 9 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டது.

**அக்டோபர் 3** அன்று முதல் பருவத்தேர்வு விடுமுறை முடிந்து பள்ளி திறப்பு. மகாத்மா காந்திஜி பற்றிய தகவல்களை நம் பள்ளி மாணவர்கள் நாடகமாக அரங்கேற்றினார்கள். காமராஜர் நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.



**அக்டோபர் 9** அன்று விஜயதசமி கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கு சுண்டல் வழங்கப்பட்டது. அன்றைய தினமே பள்ளியின் தாளாளர், சீர்காழி ஒருங்கிணைப்பாளர் திருமதி ராதிகா, திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி ரோசி மரியாள் அவர்களும் நமது வித்யாரம்பம் பள்ளிக்கு வருகைப்புரிந்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இரண்டாம் பருவ பயிற்சி அளித்தார்கள். அக்டோபர் 9,10,11 மூன்று நாட்கள் இரண்டாம் பருவ பயிற்சி நடைப்பெற்றது.



**அக்டோபர்** 11 அன்று காலை இறைவணக்க கூட்டத்தில் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி ரோசி மரியாள் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி சிறப்பித்தார்கள்.

அன்றைய தினம் நம் பள்ளி மாணவர்கள் அருகிலுள்ள சாமந்தான்பேட்டை அரசு நடுநிலைப்பள்ளிக்கு சென்று மகாத்மா காந்திஜி பற்றிய தகவல்களை நாடகமாக அரங்கேற்றி சிறப்பித்தார்கள்.

**அக்டோபர்** 14 அன்று நமது பள்ளியில் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் காரைக்கால் விநாயகா மருத்துவமனையிலிருந்து சிறப்பு மருத்துவர்கள் வருகைப்புரிந்து மாணவர்களை பரிசோதித்து உரிய ஆலோசனைகள் வழங்கி மருந்து மாத்திரைகளும் வழங்கப்பட்டன.

**அக்டோபர்** 15 Dr.APJ அப்துல்கலாம் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

## சென்னை – மறைமலைநகர்

**2019 – 2020** கல்வி ஆண்டிற்கான முதல் பருவப்பயிற்சி சென்னை அடையார், இளைஞர் விடுதியில் மே மாதம் **29, 30, 31** ஆகிய தேதிகளில் நடைபெற்றது. முதல் நாள், மழலையர், இளநிலை மையங்களுக்கான செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டது. இரண்டாம் நாள் பயிற்சியில் திருமதி.







சந்திரா அனில், **Aid India** நிறுவனத்திலிருந்து இயற்கை மருத்துவர் வெங்கடேஷ்வரன் அவர்களும், ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் மாலதி கோபாலகிருஷ்ணன் அவர்களும் திருமதி சுசீலா ராகவன் அவர்களும் கலந்து கொண்டனர். மூன்றாம் நாள் மூன்று மையங்களுக்கான **Material** க்கான விளக்க உரை எழுதுவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டது. முதுநிலை பாடங்களுக்கு செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டது.



06.06.2019 - அன்று மறைமலைநகரின் **SMLC** மையமும் , **ELE** மையமும், திருமதி. பிரேமா மேடம், திருமதி. ஸ்ரீமதி மேடம் திரு.பட்டாபி Sir அவர்களால் குத்து விளக்கு ஏற்றி துவக்கப்பட்டது. அதை தொடர்ந்து முதல் பருவத்திற்கான பயிற்சி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டது.



**12.06.2019** அன்று சென்னை தலைமை அலுவலகத்தில் முதல் பருவத்திற்கான **ELE** பயிற்சி முதல் பாடத்திற்கு 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கு . சென்னை மற்றும் மறைமலைநகர் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டது. ஆசிரியர்கள் ஆங்கில பாடங்களுக்குரிய செயல்முறை விளக்கங்களை செய்து காட்டினர்.









21.06.2019 அன்று 1 - 5 ஆம் வகுப்புக்கான பயிற்சியும், ஆசிரியர் தேர்வுக்கான பயிற்சியும் அளிக்கப்பட்டது.

**2.06.2019** அன்று 1 - 5 ஆம் வகுப்புக்கான **ELE** இரண்டாம் நாள் பயிற்சியின் போது நம் ELE ஆசிரியர்களுடன், **Turning Point** அறக்கட்டளையில் இருந்து உறுப்பினர்கள் நம் பயிற்சியில் கலந்து கொண்டனர். அவர்கள் பயிற்சி சிறப்பாகவும் பயன் உள்ளதாக உள்ளது என்று கூறினர். இதில் திருமதி. பிரேமா மேடம், திருமதி.ஸ்ரீமதி மேடம், Open அறக்கட்டளையின் உறுப்பினர் Mr.ஸ்ரீதர் சொக்கலிங்கம் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





**24.06.2019** அன்று அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் VT பாட Materials –fSf;கான Literature உருவாக்குவதற்கான விளக்கங்களும், திருத்தங்களும் சொல்லபட்டது. ஒருங்கிணைப்பாளருக்குகான பாடங்கள் கொடுக்கபட்டன. செப்டம்பர் மாத முடிவில் Literature தயாரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.



**25.06.2019** மூன்றாம் நாள் 1-5 வகுப்புக்கான பயிற்சி அளிக்கப்பட்டது.

**13.07.2019**அன்று இரண்டாம் Unit - க்கான ELE பயிற்சி சென்னை மற்றும் மறைமலைநகர் ஆசிரியர்களுக்கு **VR.Sir Video** காண்பிக்கபட்டது. மையத்திற்கு, செயல் விளக்கங்களுடன் நடத்தப்பட்டது.ஆசிரியர்கள் Activity செய்து பாடங்களை புரிந்துக் கொண்டனர்.





**23.07.2019** அன்று சென்னை (1-5) ஆம் **Role play, Conversation** மையத்திற்கான நடுநிலை வகுப்புக்கான ELE பயிற்சி அளிக்கப்பட்டது. ஆசிரியர்களுக்கு செயல்முறை பயிற்சிகள் மூலம்

ஆங்கிலபாடத்திற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் மறைமலைநகர் மையத்தின் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.



**14.08.2019** அன்று Open தொண்டு நிறுவனத்தின் உறுப்பினர்கள் திரு. ஸ்ரீதர் சொக்கலிங்கம் மற்றும் திருமதி. வித்யா அவர்கள் சென்னை அலுவலகத்திற்கு வருகைதந்தனர். ELE பாடதிட்டங்கள் மதிப்பீட்டு செயல்முறைகளையும் மற்றும் நிதி அறிக்கைப் பற்றி கேட்டு அறிந்தனர்.



**27.08.2019** - அன்று திரு.ரெங்கநாதன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நமது அறங்காவலர்கள் C.K .ஸ்ரீதர் மற்றும் Y. ஸ்ரீதர் அவர்கள் **Science activity** , **English activity** மற்றும் **ஆடலும் பாடலும்** புத்தகமும் வெளியிட்டனர்.அதை E. Magic நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு.எழில் வேந்தன் மற்றும் அவரது துணைவியார் இருவரும் புத்தகங்களை பெற்றுக் கொண்டனர்.



**25.09.2019, 26.09.2019 மற்றும் 27. 09.2019** ஆகிய நாட்களில் இளைஞர் விடுதி - இந்திரா நகர், அடையாரில் நடைபெற்றது. அதில் அறங்காவலர்கள், மேலாளர், மாநில ஒருங்கிணைப்பாளர்கள், மதிப்பீட்டாளர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். முதல் நாள் யோகரக்ஷனா நிறுவனத்தில் இருந்து திரு.ஹரி அவர்கள் யோகாவின் பயன்களையும் மற்றும் அதன் செயல்முறைகளையும் விளக்கினார். நிழல் மையம் நிறுவனத்தில் இருந்து திருமதி ஷோபா அவர்கள் மரத்தின் தேவைகளை பற்றியும் மரங்களின் தன்மை பற்றியும் எடுத்துரைத்தார். இரண்டாம் நாள் நம்ம ஊரு மையத்திலிருந்து. திரு நடராஜன் அவர்கள் குப்பைகளின் மேலாண்மை பற்றி எடுத்துரைத்தார்.



**04.10.2019 மற்றும் 05 .10.2019** அன்று இரண்டாம் பருவத்திற்கான Kids, Junior மற்றும் Senior மையத்திற்க்கான அனைத்து பாடங்களின் செயல்முறை விளக்கங்களுடன் ஒருங்கிணைப்பாளர்களால் நடத்தப்பட்டது.

**11.10.2019** அன்று இரண்டாம் பருவத்திற்கான ELE பயிற்சி ஆசிரியர்களுக்கு செயல் விளக்கங்களுடன் பாடங்கள் நடத்தப்பட்டன. மறைமலைநகர் மையத்தின் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.







## தொண்டர்கள் பெற்ற பாராட்டுகள்

திருநெல்வேலி மாவட்டம் முனைச்சிபட்டி பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் நமது மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி. பிரபாவதி அவர்களை பாராட்டிய போது




தூத்துக்குடி மாவட்டம் அழகுநாச்சியார்புரம் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் நமது ஒருங்கிணைப்பாளர் மற்றும் மதிப்பீட்டாளரை பாராட்டிய போது





திருச்சி மாவட்டம் வேலனூர் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளியில் நமது ஒருங்கிணைப்பாளர் மற்றும் மதிப்பீட்டாளரை பாராட்டிய போது





நாகப்பட்டினம் மாவட்டம் கன்னாங்குளம் பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளியில் நமது மதிப்பீட்டாளர்களை பாராட்டினர்

நாகப்பட்டினம் மாவட்டம் சீயாளம் பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளியில் சர்வசிக்ஷா அபியானை சேர்ந்த ஒருங்கினைப்பாளர்கள் அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வந்த போது அப்பள்ளி குழந்தைகள் வித்யாரம்பத்தின் பயிற்சியால் கணிதம், ஆங்கிலம் போன்றவற்றில் சிறப்பான முன்னேற்றம் அடைந்திருப்பதாக வித்யாரம்பத்தின் ஆசிரியர்களை பாராட்டினர்.





# கண்ணீர் அஞ்சலி

அரியலூர் மாவட்டம் கே. மேட்டு தெரு, மையம் எண் ALR30104, 10109 ஆகிய மையங்களின் ஆசிரியர் B. நந்தினி அவர்கள் மூளை காய்ச்சல் நோயால் 20.11.2019 அன்று அகால மரணமடைந்தார். இவர் பயிற்சி பெற்ற விதமும் குழந்தைகளுக்கு கல்வி கற்பித்த விதமும் அந்த ஊரில் உள்ள பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இவர் பெற்ற பாராட்டுகளும் அளப்பறியது.











நன்றி

Editor: Coordinators
(For private circulation only)

Vidyarambam Trust
Park View Apartments, II floor,
No: 85/94, G.N.Chetty Road,
T.Nagar, Chennai – 600 017

Website: www.vidyarambam.org
Phone: 044 -28152590
Email: vidyarambam@gmail.com